1981 ஏப்ரல் 21]

நரிப்பள்ளி ஆற்றின் குறுக்கே பாலம் சட்டும் திட்டம்.

*வினா எண். 818—திரு. சி. சபாபதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர்—திருவண்ணாமலை செல்லும் வழியில் நரிப்பள்ளி ஆற்றுக்கு இடையில் பாலம் அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அத்திட்டம் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. சபாபதி: தலைவர் அவர்களே, அரூர் வழியாக திருவண்ணாமலை செல்லும் பாதையில் நரிப்பள்ளி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கலாம் என்று ஏதாவது உத்தேசம் அரசுக்கு உள்ளதா என்று கேட்க விரும்புகிறேன்? (பதில் இல்லை).

தாம்பிரபரணி ஆற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 819—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம்—தாம்பிரபரணி ஆற்றில் ஆழ்வார் திருநகரையும் ஆழ்வார்தோப்பையும் போக்குவரத்துக்கு இணைக்கும் வகையில் ஒரு பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எப்பொழுது நடைபெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். என். இராமசாமி: தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் உள்ள அந்த ஆழ்வார்தோப்பையும் ஆழ்வார்திருநகரையும் இணைக்கக்கூடிய வகையில் ஒரு பாலம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கட்ட வேண்டியது மிக அவசியமாக இருக்கிறது. காரணம் அங்குள்ள மக்கள் பொது வேலைகளுக்கு வெளியில் செல்ல வேண்டும் என்றால், அந்த ஆற்றைக் கடக்க வேண்டும். ஆற்றின் அகலம் ஒரு கிலோ மீட்டர் இருக்கிறது. அப்படி ஆற்றைக் கடக்க வேண்டிய அவசியம் நேரிடும்போது, சுற்றிக்கொண்டு 7 மைல் கடந்துசெல்ல வேண்டியதிருக்கிறது. ஆகையினால் உடனடியாக, ஒரு மீட்டர் அகலம் உள்ள அந்த ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்கப்படுமேயானால் அது அந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கும். இதைக் கருத்தில் கொண்டு அங்கே பாலம் அமைக்கும் திட்டத்தை அரசு மறுபரிசீலனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தாமிரபரணி ஆற்றின் நீர்வழி அகலம் 360 மீட்டராகும். மேற்படி இடத்தில் தாமிரபரணி ஆற்றில் ஓர் முழ்கு பாலம் கட்டவும் அணுகு சாலைகள் அமைக்கவும் தோராயமாக ரூ. 56 இலட்சம் தேவைப்படும். இவ்விடத்தில் ஓர் உயர்மட்ட பாலம் கட்ட ரூ. 120 இலட்சம் தேவைப்படும். எந்தவிதமான அனுமதிக்கப்பட்ட திட்டத்திலும் இது இடம்பெறவில்லை. ஆகவே, நிதிநிலை சரியானவுடன், இது கவனிக்கப்படும்.

[முற்பகல் 9—20]

திரு. எஸ். என். இராமசாமி : ஒட்டப்பிடாரம்-சாத்தான்குளம் இணைப்புப் பாதையை இந்தப் பாலத்தில் ஏற்படுத்த அனைத்து அதிகாரிகளும் வந்து ஆய்வு வேலைகள் செய்ததாகக் கேள்விப்படுகிறேன். இது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆய்வு செய்தபின்னால் தான் இந்தத் தோராயமான மதிப்பீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

சின்னசேலத்திலுள்ள அரசு மருந்தகம்.

* வினா எண். 820—திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சின்னசேலத்தில் உள்ள அரசு மருந்தகத்தை அரசு மருத்துவமனையாக மாற்றுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும்?